JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | **1124/2016** |
| Deposition of witness for | **P.W. 1** | Prosecution /Defence / Court | |
| Name | **Palanisamy** | Village | |
| Father's Name | **Thangavel** | Taluk | |
| | | Age | |

**Accused present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 27.03.2026.**

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவேன். நான் என்னுடைய முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை ஏற்கனவே தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான்.

புகார்தாரர் பெயரில் உள்ள 01.06.2016 ம் தேதியிட்ட PUNB வங்கி , கச்சேரி வீதி கிளையின் ரூ.3,00,000 /−ற்கான காசோலை (காசோலை எண். 691152) அசல். **பு.சா.ஆ.1**

11.07.2016 ம் தேதியிட்ட காசோலை கலெக்ஷன் மெமோ , **பு.சா.ஆ.2**,

12.07.2016 ம் தேதியிட்ட காசோலை திருப்பப்பட்டதற்கான வங்கி குறிப்பாணை அசல் , **பு.சா.ஆ. 3**,

18.07.2016 ம் தேதியிட்ட புகார்தாரர் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர்

அறிவிப்பு அலுவலக நகல் அஞ்சலக ரசீதுடன், **பு.சா.ஆ.4,**

19.07.2016 ம் தேதியிட்ட அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல், **பு.சா.ஆ.5,**

30.05.2025 ம் தேதியிட்ட எனக்கு S.P வேலுச்சாமி வழங்கிய பொது அதிகாரப் பத்திரம், **பு.சா.ஆ.6,**

ஆவணமாக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி பணமோ பதிலோ எனக்கு தரவில்லை. எதிரிக்கு தக்க தண்டனையும், எனக்கு நஷ்ட ஈடும் வழங்க வேண்டுகிறேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. எனக்கும், வேலுச்சாமிக்கு எத்தனை ஆண்டுகளாக பழக்கம் என்றால் 20 ஆண்டுகளாக பழக்கம். பொது அதிகாரம் எந்த தேதியில் எனக்கு கொடுத்தார் என்றால் தேதி எனக்கு ஞாபகம் இல்லை. எனக்கு இந்த வழக்கு சம்பந்தமாக விவரங்கள் அனைத்தும் தெரியும் என்றால் சரிதான். எதிரிக்கு புகார்தாரர் வேலுச்சாமி எவ்வளவு பணம் கொடுத்தார் என்றால் ரூ. 3,00,000 கொடுத்தார். எங்கு வைத்து பணம் கொடுத்தார் என்றால் வேலுச்சாமி வீட்டில் வைத்து பணம் கொடுத்தார். அப்போது யார் உடன் இருந்தார்கள் என்றால் நானும், வேலுச்சாமியும் மட்டும் இருந்தோம். வேலுச்சாமிக்கு மனைவி மற்றும் மகன் இருக்கிறார் என்றால் சரிதான்.

2. நானும், வேலுச்சாமியும் வெவ்வேறு சமூகத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். வேலுச்சாமியின் மகன் பெயர் குமார் அவருடைய அசல் பெயரே குமாரா என்றால் குமார் என்று அழைப்பார்கள். அசல் பெயர் தெரியவில்லை. ரூ.3,00,000 த்தை 500 ரூபாய் நோட்டுகளாக கொடுத்தாரா 1000 ரூபாய் நோட்டுக்களாக கொடுத்தாரா என்றால் 500 ரூபாய் நோட்டுக்கள் 6 கட்டுக்கள் கொடுத்தார். வேலுச்சாமிக்கு அண்ணன் தம்பி எத்தனை பேர் என்றால் அண்ணன் தம்பி இல்லை அவர் ஒருவர் மட்டும் தான்.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை